**TNPSC GROUP IIA MAIN 2024**

# விடுதலைப் போராட்டத்தில் தமிழ்கத்தின் பங்கு

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு பெருமைக்குரிய ஒன்றாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே தென்னிந்தியக் கிளர்ச்சி (1800-1801)க்குத் தோற்றுவாயாக இருந்தது தமிழ்நாடு. வேலூர்க் கிளர்ச்சி (1806)யில் தமிழ்நாட்டுப் படைவீரர்கள் துணிவுடன் போராடினார்கள்.

## தமிழ்நாடும் துவக்க கால காங்கிரசும்

### முதல் மாநாட்டில் தமிழ்நாடுப் பிரதிநிதிகள்

ஆலன் ஆக்டேவியன் ஹியூமின் சோர்வற்ற முயற்சியின் விளைவாக இந்திய தேசிய காங்கிரசின் முதல் மாநாடு 1885 டிசம்பர் 28ஆம் தேதி பம்பாயில் கூடியது. அக்கூட்டத்தில் கலந்து கொண்ட 72 பிரதிநிதிகளில் சென்னை மாநிலத்திலிருந்து சென்றவர்கள் 21 பேர். அவர்களுள் தமிழ்நாட்டுப் பகுதியிலிருந்து சென்ற பிரதிநிதிகள் 26 பேர்.

முதல் காங்கிரஸ் மாநாட்டுத் தலைவராக டி.டபுள்யு.சி. பானர்ஜியின் பெயரை வழி மொழிந்து, மாநாட்டின் முதல் தீர்மானத்தை முன்மொழிந்த பெருமை தமிழ்நாட்டுப் பிரதிநிதியான ஜி. சுப்பிரமணிய அய்யருக்கே கிடைத்தது.

### சென்னையில் மூன்றாவது மாநாடு

காங்கிரசின் மூன்றாவது மாநாடு 1887 டிசம்பரில் சென்னை நகரில் தற்போது ஆயிரம்விளக்கு என்றழைக்கப்படும் பகுதியில் மக்கீஸ் தோட்டம் என்னுமிடத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. பக்ருதீன் தியாப்ஜியின் தலைமையில் கூடிய அம்மாநாடு முதன்முறையாகத் திறந்த வெளித் திடலில் பிரத்யேகமாக அமைக்கப்பட்டது.

### தமிழ்நாட்டு மிதவாதிகள்

கோபால கிருஷ்ண கோகலேயைப் பின்பற்றியவர்கள் காங்கிரஸ் மிதவாதிகள் என்றழைக்கப்பட்டனர். கோகலே முன் வலக்கரமாகத் திகழ்ந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த வி.எஸ்.சீனிவாச சாஸ்திரி மிதவாதிகளுக்கெல்லாம் மிதவாதியாக விளங்கினார். அவரைப் போன்ற பி.எஸ்.வெங்கடராம சாஸ்திரியும், 'இந்தியன் ரெவ்யூ பத்திரிக்கை ஆசிரியரான ஜி.ஏ. நடேசனும் தமிழ்நாட்டின் தலைசிறந்த மிதவாதிகளாவர்.

**தமிழ்நாட்டுத் தீவிரவாதிகள்**

சேலம் விஜயராகவாச்சாரியைத் தமிழ்நாட்டுத் தீவிரவாதத்தின் தந்தை எனக் கூறலாம். சேலத்தைத் தென்னாட்டின் பூனா எனக்கருதிக் கொண்டு திலகர் அடிபற்றித் தமிழ்நாட்டுத் தீவிரவாதிகள் செயல்பட்டனர். சென்னையில் டி.எம்.நாயர், எஸ்.கஸ்தூரிரங்க அய்யங்கார், ஏ. ராமசாமி அய்யங்கார், டி. ரெங்காச்சாரி ஆகியோர் செல்வாக்கு மிக்கத் தீவிரவாதிகளாகத் திகழ்ந்தனர்.

**தமிழ்நாட்டுத் பயங்கரவாதிகள்**

மிதவாதிகளிடமிருந்து தீவிரவாதிகள் தோன்றியது போன்று தீவிரவாதிகளிடமிருந்து பயங்கரவாதிகள் உருவாயினர். இவர்களின் சிலர் 1905இல் இலண்டனில் 'ஹோம் ரூல் லீக்' என்ற அமைப்பையும், 1906ல் 'இந்தியா விடுதி' என்ற முகாமையம் அமைத்தனர். தமிழ்நாட்டைச் சேர்ந்த வ.வே. சுப்பிரமணிய ஐயரும், திருச்சி டாக்டர் டி.எஸ்.எஸ் ராஜனும், எம்.பி.டி. ஆச்சாரியாவும் இப்பயங்கரவாதப் பாசறையில் பயிற்சி பெற்றோர் ஆவர். வெள்ளை அதிகாரிகளைக் கொன்று அந்நிய ஆட்சியாளரிடையே பயத்தை ஏற்படுத்தி தக்கதருணத்தில் வன்முறைக் கிளர்ச்சி செய்து, இந்தியாவை விடுவிப்பது இவர்களது குறிக்கோளாகும்.

**வ.வே.சு. ஐயர்**

பாரிஸ்டர் படிப்புக்காக இலண்டன் சென்ற வ.வே.சு.ஐயர் பயங்கரவாதியானார். 'இந்தியா விடுதியில்' தங்கியிருந்த இவர் பிற பயங்கரவாதிகளுடன் சேர்ந்த இந்திய விடுதலைக்காக பிரிட்டிஷ் அரசை எதிர்த்து ஆயுதப் புரட்சியை ஏற்படுத்தத் திட்டமிட்டார்.

ஐயர் ரஷ்யாவுக்குச் சென்று வெடிகுண்டு தயாரிக்கும் முறையைக் கற்றுக்கொண்டு புதுவைக்கு வந்தார். (1910)

புதுவையில் தஞ்சம் புகுந்த ஐயர் 'தர்மாலயம்' என்ற அமைப்பை ஏற்படுத்தி பயங்கரவாதப் புரட்சியாளர்களுக்குக் குத்துச்சண்டை, மல்யுத்தம், கத்திச்சண்டை, துப்பாக்கிச் சுடல் ஆகியவற்றில் பயிற்சி அளித்து வந்தார். புதுவையில் புகலிடம் பெற்றிருந்த மற்றொரு தமிழ்நாட்டுப் பயங்கரவாதியான நீலகண்ட பிரம்மச்சாரியைப் பார்க்கச் சென்ற இளைஞர் வாஞ்சிநாதனுக்குப் 'பிரௌனிங்' கைத்துப்பாக்கியால் சுடுவதற்குப் பயிற்சியளித்தார் வ.வே.சு. ஐயர்.

**வாஞ்சிநாதன்**

தமிழ்நாட்டின் பகத்சிங் என அழைக்கப்படும் வாஞ்சிநாதன் அரசாங்க அடக்குமுறைக்குக் காரணமான நெல்லை மாவட்டக் கலெக்டர் ராபர்ட் வில்லியம் ஆஷ் என்ற அதிகாரியைக் கொல்லத் திட்டமிட்டார். புதுவையிலிருந்து நீலகண்ட பிரம்மச்சாரியை சந்தித்தார். வ.வே.சு. ஐயரிடம் துப்பாக்கி சுட பயிற்சி பெற்றார். 1911 ஜீன் 17ஆம் தேதி கொடைக்கானலுக்குச் செல்வதற்காக நெல்லையிலிருந்து புகைவண்டியில் தன் மனைவியுடன் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்த ஆஷை மணியாட்சி புகைவண்டி நிலையத்தில் பிரௌனிங் கைத்துப்பாக்கியால் சுட்டுக்கொன்றார்.

**நீலகண்ட பிரம்மச்சாரி**

நீலகண்ட பிரம்மச்சாரி ஆஷ் கொலை வழக்கில் குற்றவாளியாக கருதப்பட்டு ஏழாண்டு காலம் சிறைத்தண்டனை பெற்றவர்.

பாரதமாதா சங்கம் - 1910

புதுவையில் சூரியோதயம் பத்திரிக்கை

நந்திமலையில் ஆசிரம் ஒன்றை அமைத்து அமைதியாக வாழ்ந்து தனது 88 வயதில் உயிர் நீத்தார்.

**டாக்டர் செண்பகராமன்**

நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த டாக்டர் செண்பகராமன் பிரிட்டனுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்ய சில அமைப்புகளை ஏற்படுத்தினார். புரோ இந்தியா என்ற பெயரில் பத்திரிக்கை நடத்தினார்.

எம்டன் என்ற நீர்மூழ்கிக் கப்பல் மூலம் சென்னை உயர்நீதிமன்றக் கட்டிடத்தைக் குறிவைத்து குண்டு வீசியவர் (1914).

இந்திய விடுதலைப்போராட்டத்தில் தேசிய பயங்கரப் புரட்சியாளர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். சுபாஷ் சந்திர போசிற்கு ஜெய்ஹிந்த் என்ற வாசகத்தை அறிமுகப்படுத்திய காரணத்தால் ஜெய்ஹிந்த் செண்பகராமன் என அழைக்கப்படுகிறார்.

APOLLO STUDY CENTRE

**சுயாட்சி இயக்கம்**

1907ல் ஏற்பட்ட சூரத் பிளவுக்குப் பின்னர் காங்கிரஸ் தீவிரவாதிகள் அரசாங்கத்தால் கடுமையாக ஒடுக்கப்பட்டனர். மிதவாதிகள் வலுவிழந்து போயினர். தேசிய இயக்கத்தை வழிநடத்தக் கூடிய அன்னிபெசன்ட் அம்மையார் இந்தியா சுயாட்சிபெற வேண்டுமாயின் மிதவாதிகளும் தீவிரவாதிகளும் மீண்டும் ஒன்றுசேர வேண்டுமென்று விரும்பினார். அவ்விருப்பம் நிறைவேறவில்லை. அதனால் அவர் ஒரு புதிய அரசியல் அமைப்பான சுயாட்சி சங்கத்தை (Home Rule League) உருவாக்கினார்.

1916 செப்டம்பர் 3ஆம் தேதி சென்னை கோகலே மண்டபத்தில் சுயாட்சி சங்கம் துவக்கப்பட்டது. அன்னிபெசன்ட், சி.பி.ராமசாமி அய்யர், ஜி.எஸ்.அருண்டேல், பி.பி.வாடியா, எஸ். சுப்பிரமணிய அய்யர், என்.சுப்புராவ், பி.பட்டாபி சித்தாராமைய்யா, எ.ரெங்கநாத முதலியார், மாஜேரி ராமய்யர் ஆகியோர் சுயாட்சி இயக்கத்தின் பிரதான தலைவர்களாவர். சுயாட்சி சங்கத்தின் தலைவராக அன்னிபெசன்ட், ஜி.எஸ்.அருண்டேல் அமைப்புச் செயலாளராகவும், சி.பி.ராமசாமி அய்யர் பொதுச் செயலாளராகவும், பி.பி.வாடியா பொருளாளராகவும் பொறுப்பேற்றனர். பிரிட்டிஷ் பேரரசுக்குள் இந்தியா சுயாட்சி பெற வேண்டுமென்பதே சுயாட்சி சங்கத்தின் குறிக்கோளாகும்.

தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் சுயாட்சி சங்கத்தின் கிளைகள் துவக்கப்பட்டன. கோயம்புத்தூரில் இருந்த 10 பிரம்ம ஞான சபை விடுதிகளும் சுயாட்சி இயக்க மையங்களாகச் செயல்பட்டன. சென்னை சட்டமன்ற உறுப்பினரான தஞ்சை வி.கே.ராமனாசாரி தமிழ்நாட்டில் சுயாட்சி இயக்கத் தலைவரானார். 1917 மே 9ல் கடலூரில் வி.பி.மாதவராவ் தலைமையில் மாநில சுயாட்சி மாநாடு நடைபெற்றது. பல மாவட்ட மாநாடுகள் நடத்தப்பட்டன. பிரசுரங்கள்மூலம் சுயாட்சிப் பிரச்சாரம் செய்யப்பட்டது. 1917

மே மாதத்துக்குள் 10,000 உறுப்பினர்கள் சேர்ந்தனர். காங்கிரஸ் மிதவாதிகளும் சுயாட்சி சங்கத்தை ஆதரிக்கத் துவங்கினர்.

சுயாட்சி இயக்கத்தின் குறிக்கோளைப் பற்றிப் பிரச்சாரம் செய்வதற்கென பி.எஸ்.குமாரசாமி ராஜா 'மீனாட்சி சகாய விவேகா வித்யால' யத்தை ஏற்படுத்தினார். அன்னிபெசன்ட் அம்மையாரின் வேண்டுகோளுக்கிணங்க அரசியல் சட்டத்திருத்தத்துக்கு ஆதரவாகக் கையெழுத்து சேகரிப்பதற்கென பிரம்ம ஞான மாநாடு ஒன்று ராஜபாளையத்தில் நடத்தப்பட்டது. அன்னிபெசன்ட் கைது செய்யப்பட்டபோது பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கெதிராக முதல் அரசியல் ஊர்வலம் இங்கு நடத்தப்பட்டது.

1917 ஜூன் 12ஆம் நாள் பென்ட்லன்டு பிரபு அன்னிபெசன்ட் அம்மையாரை அழைத்து சென்னை மாநிலத்தின் நிலைமையை விளக்கிக்கூறி, இங்கிலாந்துக்குத் திரும்பிப் போய்விடுமாறு கேட்டுக் கொண்டார். அதற்கு அன்னிபெசன்ட் மறுத்து விட்டார். எனவே ஜூன் 15 ஆம் தேதி அன்னிபெசன்ட், பி.பி.வாடியா, ஜி.எஸ்.அருண்டேல் ஆகியோர் உதகமண்டலத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். 'போராட்டவாதிகளையெல்லாம் விஞ்சி நிற்கும் போராட்டவாதி' என்று காந்தியால் வர்ணிக்கப்பட்ட அன்னிபெசன்ட் காவலில் வைக்கப்பட்டதை கண்டித்து காங்கிரஸ் மிதவாதியும் ஓய்வுபெற்ற நீதிபதியுமான எஸ்.சுப்பிரமணிய அய்யர் 'சர்' பட்டத்தை துறந்தார்.

வெஸ்லி கல்லூாயில் தமிழாசிரியராகப் பணியாற்றிவந்த திரு.வி.கல்யாணசுந்தர முதலியார் வேலையைத் துறந்துவிட்டு அரசியல் பிரவேசம் செயதார். அன்னிபெசன்ட் துவங்கிய சுயாட்சி இயக்கம் தேசியப் போராட்டத்தை தீரத்துடன் வழிநடத்தியது. அவரது சாதனைகளைப் பாராட்டி அவரைப் பெருமைப்படுத்தும் பொருட்டு 1917 டிசம்பரில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1917 ஆகஸ்டு 20 மாண்டேகு பிரகடனம் அன்னிபெசன்ட் அம்மையாரின் சுயாட்சி சங்கத்துக்குக் கிடைத்த பரிசு எனலாம்.

APPOLO STUDY CENTRE

**ரௌலட் சத்தியாக்கிரகம்**

காந்தி தமிழ்நாட்டில் தங்கியிருந்தபோதுதான் ரௌலட் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தீவிர ஆலோசனைக்குப்பிறகு சென்னையிலிருந்து காந்தி தனது செயல்திட்டத்தை அறிவித்தார். 1919 மார்ச் 30 தேதியன்று இந்தியா முழுவதும் அர்த்தால் நடைபெற வேண்டும் என்று முதலில் அறிவிக்கப்பட்டது. பின்னர் கஸ்தூரிரங்க அய்யங்கார், ராஜகோபாலாச்சாரி, விஜயராகவாச்சாரி ஆகியோரைக் கலந்தாலோசித்து அர்த்தால் தேதியை தள்ளிப்போட்டார் காந்தி. பின்னர் தஞ்சாவூர், திருச்சி, மதுரை, தூத்துக்குடி ஆகிய நகரங்களுக்குச் சுற்றுப் பயணம் சென்று ரௌலட் சட்ட எதிர்ப்புப் பிரச்சாரம் செய்தபின்னர் சென்னையிலிருந்து பம்பாய் சென்றார் காந்தி (1919 மார்ச் 28).

1919 ஏப்ரல் 6 ஆம் தேதி தமிழ்நாட்டில் ரௌலட் சட்ட எதிர்ப்பு நாள் துக்கதினமாகக் கொண்டாடப்பட்டது.

**கிலாபத் இயக்கம்**

காந்தியின் முழு ஒத்துழைப்போடு இந்திய முஸ்லீம்கள் துவக்கிய கிலாபத் இயக்கத்தில் தமிழ்நாடு ஆர்வத்தோடு கலந்து கொண்டது. ரௌலட் சத்தியாகிரகத்தில் முழுமூச்சுடன் ஈடுபட்டுத் தனது செலவாக்கைப் பலப்படுத்திக் கொண்டிருந்த சி.ராஜகோபாலாச்சாரி கிலாபத் இயக்கத்தை ஆதரித்து அதன்மூலம் தமிழ்நாட்டு முஸ்லீம்களின் ஆதரவையும் பெற்றார். 1919 ஆகஸ்டில் கூடிய சென்னை மாநில காங்கிரஸ் மாநாட்டில் அலி சகோதரர்களை விடுதலை செய்யக்கோரும் தீர்மானத்தைக் கொண்டு வந்தார் அவர். அவ்வாண்டு அக்டோபர் 17ஆம் தேதி அனுசரிக்கப்பட்ட கிலாபத் தினத்துக்க தமிழ்நாட்டு இந்துக்களின் ஆதரவையும் திரட்டித் தந்தார். கிலாபத் கூட்டங்களிலும் கலந்து கொண்ட ராஜகோபாலாச்சாரி யாகூப் ஹாசனை ஆதரித்துப் பேசினார். தமிழ்நாட்டில் வடஆற்காடு தவிர பிற மாவட்டங்களிலெல்லாம் கிலாபத் கமிட்டிகள் இந்துக்களின் ஆதரவோடு செயல்பட்டன.

1920 ஏப்ரல் 20ஆம் தேதி சென்னை நகரில் மௌலானா ஷவுக்கத் அலியின் தலைமையில் கிலாபத் மாநாடு நடைபெற்றது. வடஆற்காடு மாவட்டத்திலுள்ள வாணியம்பாடி கிலாபத் இயக்கத்தின் உயிர்நாடியாகத் திகழ்ந்தது.

## ஒத்துழையாமை இயக்கம்

- தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கம் சி. ராஜகோபாலாச்சாரியின் தலைமையில் ஆர்வத்துடன் நடத்தப்பட்டது.

- சென்னை பச்சையப்பன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த அவரது மகன் ரா. இராமசாமியையும் மாநிலக்கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த மற்றொரு மகன் ரா. கிருஷ்ணசாமியையும் அக்கல்லூரியிலிருந்து வெளியேறச் செய்து, அவர்களை கதர்த் தொண்டில் ஈடுபடுவதற்காக சேலத்துக்கு அனுப்பி வைத்தார் அவர்.

- ‘பாரிஸ்டர்’ பட்டம் பெற்றிருந்த மதுரை வழக்கறிஞர் ஜார்ஜ் ஜோசப் தனது தொழிலைத் துறந்து ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தார். எஸ். சீனிவாச அய்யங்கார் தனது அட்வகேட் ஜெனரல் பதவியையும், ‘சி.ஐ.ஈ’ என்ற பட்டத்தையும் துறந்தார். வ.உ.சிதம்பரம் பிள்ளை ஒத்துழையாமை இயக்கத்தை ஆதரிக்காவிட்டாலும் கூட தனது வக்கீல் தொழிலைத் துறந்து இலக்கிய பணியில் ஈடுபட்டார். சென்னை என்.எஸ்.

வரதாச்சாரி, எஸ். ராமநாதன் ஆகிய இளம் வழக்கறிஞர்கள் நீதிமன்றம் செல்வதை நிறுத்திவிட்டனர்.

- 1920 இறுதியில் நடக்கவிருந்த மாநில சட்டமன்றப் புறக்கணிப்புப் பிரச்சாரத்தில் தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்கள் தீவிரமாக ஈடுபட்டனர். தேர்தலில் போட்டியிட வேண்டாமென்று வேட்பாளர்களையும், மீறிப் போட்டியிடுவோருக்கு ஆதரவளிக்க வேண்டாமென்று வாக்காளர்களையும் அவர்கள் வேண்டிக் கொண்டனர்.

- 1921 ஜனவரி 10 ஆம் தேதி சென்னைக்கு வருகைதந்த கானாட் கோமகனைப் புறக்கணித்தனர். தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்கள், சென்னை நகரின் மூலை முக்குகளிலெல்லாம் கோமகன் புறக்கணிப்புப் பிரச்சாரம் மும்முரமாக நடைபெற்றது.

- ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு பகுதியாகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். சென்னை தொழிலாளர் யூனியன் சார்பாக பக்கிங்காம் தொழிற்சாலை தொழிலார்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

- காந்தியடிகள் துவக்கி ஒத்துழையாமை இயக்கத்தில் ராஜபாளையம் பெரும்பங்கேற்றது. சுயாட்சி இயக்கத்தில் பங்கேற்ற நகர் தலைவர்கள் ஒத்துழையாமை இயக்கத்திலும் தீவிரமாக ஈடுபட்டனர். திருச்சியில் நடைபெற்ற 25வது சென்னை மாகாண காங்கிரஸ் மாநாட்டில் பலபிரதிநிதிகள் இவ்வூரிலிருந்து சென்று கலந்து கொண்டனர்.

- ஐ.பி. அரங்கசாமி ராஜா, பி.எஸ். சின்ன வெங்கடராஜா, பெருமாள் ராஜா, டி.எ.கே. அழகுராஜா ஆகியோர் நாக்பூர் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டனர் (1920).

- ஐ.சிப. அரங்கசாமி ராஜா வரலாற்று சிறப்புமிக்க கதர் இயக்கத்துக்கு ராஜபாளையத்தில் உறுதியான அடித்தளம் அமைத்துக் கொடுத்தார்.

- ராஜபாளையம் கை சர்க்கர நூல் நூற்கும் தொழிற்சாலை துவக்கப்பட்டது. கதரின் பெருமை பற்றிய பிரச்சாரம் செய்யப்பட்டது.

- பி.எஸ். குமாரசாமி ராஜா துவக்கிய ‘விவசாயிகள் சங்கம்’ கிராமங்களின் தேசிய உணர்வைப் பரப்பியது. வில்லிபுத்தூர் தாலுக்காவில் நடைபெற்ற அரசியல் மாநாடு கிராமங்களில் காங்கிரஸ் கமிட்டிகள் அமையக் காரணமாயிருந்தது. 1922 மார்ச் 18ம் தேதி காந்தியடிகள் கைது செய்யப்பட்டதையடுத்து ராஜபாளையத்தில் அரசியல் கொந்தளிப்பு ஏற்பட்டது.

- ஒத்துழையாமை இயக்கத்தின் போது மலபாரில் நிகழ்ந்த மாப்பிள்ளைகள் கிளர்ச்சி தமிழ்நாட்டில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியது.

- மலபார் மாப்பிள்ளைகள் கிளர்ச்சியைத் தொடர்ந்து ஒத்துழையாமை இயக்கத்தை ஒடுக்க தீர்மானித்தது சென்னை அரசாங்கம். யாகூப் ஹாசன் கை செய்யப்பட்டார். அப்துல் மஜித்ஷார் ‘தமிழ்நாடு’ பத்திரிக்கை ஆசிரியர் வரதாஜுலு நாயுடு, ‘தேசபக்தன்’ ஆசிரியர் குழவினர் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். 1921 நவம்பர் 4 ஆம் தேதி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, தனிநபர்கள் சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபடலாம் என்று எடுத்த முடிவை திருச்சியில் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஆதரித்தது (நவ 20). அதன்படி தடை உத்தரவைமீறிய ராஜகோபாலாச்சாரியும், எம்.வி. சுப்பிரமணிய சாஸ்திரியும் கைது செய்யப்பட்டனர். கோயமுத்தூரில் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்ட ஈ.வே. ராமசாமி நாயக்கரும் கைதானார். வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு வருகை தந்தபோது (1922 ஜனவரி 15) நகரில் பூரண அர்த்தால் நடைபெற்றது. ஆனால்

வன்முறையும் துப்பாக்கிச் சூடும் தமிழ்நாட்டில் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்துக்கு அவப்பெயரைத் தேடித்தந்தன. வரிகொடா இயக்கத்துக்குத் தமிழ்நாட்டில் ஆதரவில்லை. தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கத்தின் முதுகெலும்பாக இருந்த ராஜகோபாலாச்சாரி சிறையில் அடைக்கப்பட்டதாலும், காங்கிரசுக்குள்ளேயே பலருக்கு ஒத்துழையாமை இயக்கத்தில் நம்பிக்கையின்மையாலும், நீதிக்கட்சி பொது மக்களிடையே செல்வாக்கு பெற்று ஆட்சியைக் கைப்பற்றி அரசாங்கத்தை ஆதரித்ததாலும் தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கம் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி பெறவில்லை. சௌரி சௌரா வன்முறை நிகழ்ச்சியை (1922 பிப்ரவரி 4) அடுத்து காந்தியே ஒத்துழையாமை இயக்கத்தை விலக்கிக் கொண்டார்.

APPOLO STUDY CENTRE

## சுயராஜ்யக் கட்சி 1923

- ஒத்துழையாமை இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டபோதிலும் தேசத்தலைவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. இந்திய விடுதலைப் போராட்டம் தேக்க நிலையில் இருந்த போது சுயராஜ்யக் கட்சியினர் சட்டமன்றத்துக்குள் ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்குவதென முடிவு செய்தனர். தமிழ்நாட்டில் கஸ்தூரி ரங்க அய்யங்கார், சீனிவாச அய்யங்கார், வரதராஜுலு நாயுடு, விஜயராகவாச்சாரி, ஏ. ரங்கசாமி அய்யங்கார் ஆகியோர் சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்து சட்டமன்ற நுழைவை ஆதரித்தனர். 1923 நவம்பர் 13 ஆம் தேதி நடைபெற்ற மத்திய சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுயராஜ்யக் கட்சியினருள் ஏ. ரங்கசாமி அய்யங்கார், ஆர்,கே. ஷண்முகம் செட்டியார், என். சீனிவாச அய்யங்கார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். சென்னை மாநில சட்டமன்றத் தேர்தலில் சுயராஜ்யக் கட்சி 41 இடங்களைப் பெற்றாலும்கூட அமைச்சரவையை அமைக்க மறுத்துவிட்டது. அதனால் டாக்டர் பி. சுப்பராயன் தலைமையில் சுயேட்சை அமைச்சரவை அமைக்கப்பட்டது. சுயராஜ்யக் கட்சியும், நீதிக் கட்சியும் எதிர்கட்சியாக செயல்பட வேண்டியதாயிற்று இரட்டை ஆட்சியைத் தோற்கடிக்கும் நோக்கத்தோடு சுயராஜ்யக் கட்சி நீதிக்கட்சியுடன் சேர்ந்து சுயேட்சை அமைச்சரவையைக் கவிழ்க்கும் முயற்சியில் ஈடுபட்டது. தமிழ்நாட்டில் சுயராஜ்யக் கட்சியினரால் இரட்டை ஆட்சியின் தீமைகளை எடுத்துக்காட்ட முடிந்ததேயொழிய அதை செயலிழக்கச் செய்ய முடியவில்லை.

### நீல் சிலைச் சத்தியாக்கிரகம்:

- சென்னை இராணுவப் பிரிவின் தலைவராக இருந்த கர்னல் நீல் 1857 பெருங்கிளர்ச்சியை ஒடுக்குவதில் தனித்தீவிரம் காட்டியவர். அவருடைய சேவையைப் பாராட்டி பிரிட்டிஷ் அரசாங்கம் சென்னையின் பிரதான பகுதியில் நீலின் சிலையை வைத்து, விடுதலைப் போராட்டத்தின்போது அந்த 'அவமானச் சின்னத்தை' அகற்றுவதற்காக நெல்லை ந. சோமயாஜுலுவின் தலைமையில் சத்தியாகிரகக்குழு துவக்கப்பட்டது. மதுரை சீனிவாசநாத ஐயங்கார், அவரது மனைவி பத்மாசனி அம்மாள், ரெ. சிதம்பரபாரதி, டாக்டர் பி. வரதராஜுலு ஆகியோர் அச்சத்தியாக்கிரகத்தில் பெரும் பங்கேற்றனர். 1927 ஆகஸ்டு 11 ம் தேதி துவங்கிய அப்போராட்டத்துக்கு சுப்பராயலு நாயுடுவும், முகமது சாலியா ராவுத்தரும் தலைமை தாங்க நீலின் சிலையை உடைத்து சேதப்படுத்தினர். அவர்கள் கைது செய்யப்பட்டு ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை பெற்றனர். ஆகஸ்டு மாதம் துவக்கப்பட்ட நீல் சிலை சத்தியாகிரகம் டிசம்பர் வரை தொடர்ந்து நடைபெற்றது.
- சோமயாஜுலு, குடியாத்தம் சாமிநாத முதலியார், பண்ருட்டி எஸ்.ஏ. தேசநாயக ஐயா ஆகியோர் முறையே தளபதிகளாயிருந்த நீல் சிலை சத்தியாகிரகத்தை நடத்தி கைதாகி கடுந்தண்டனையைப் பெற்றனர்.

### சைமன் குழு புறக்கணிப்பு:

- 1930 பிப்ரவரி 3ஆம் தேதி சைமன் குழு பம்பாயில் வந்திறங்கிய போது அதை எதிர்த்து இந்தியாவெங்கிலும் அர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.
- சைமன் குழுவுக்கு அளிக்கப்பட்ட அரசாங்க வரவேற்பில் டாக்டர் பி. சுப்பராயன் கலந்து கொண்டதைக் கண்டித்து அவரது அமைச்சரவையிலிருந்து ரங்கநாத முதலியாரும், ஆரோக்கியசாமி முதலியாரும் பதவி விலகினர். சைமன் குழு மீண்டும் சென்னை வந்தபோது (1930 பிப்ரவரி 29) தீவிரமாகப் புறக்கணிக்கப்பட்டது. சைமன் குழு வருகையால் தமிழ்நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சி மீதிருந்த அதிருப்தியும் வெறுப்புணர்ச்சியும் அதிகரிக்கவே செய்தன.

**பூரண சுதந்திர சபதம்:**

- 1927 சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில்தான் முதன்முறையாகப் பூரண சுதந்திரமே இந்தியாவின் குறிக்கோள் என அறிவிக்கப்பட்டது.
- 1929 இறுதிக்குள் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படாவிடில் காங்கிரஸ் பூரண சுதந்திரம் கோரிப் போராடலாமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- 1930 ஜனவரி 26ஆம் தேதி தேசமெங்கும் பூரண சுதந்திர நாள் கொண்டாடப்பட்டபோது தமிழ்நாட்டில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஊர்தோறும் அந்நாள் கொண்டாடப்பட வேண்டுமென்று ராஜகோபாலாச்சாரி பத்திரிக்கைகளில் வேண்டுகோள் விடுத்தார்.

**சட்டமறுப்பு இயக்கம் (உப்புச்சத்தியாகிரகம்)**

- தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராயிருந்த ராஜகோபாலாச்சாரி தமிழ்நாட்டில் உப்புச்சத்தியாக்கிரகத்தை நடத்துவதற்கான தளபதியாகக் காங்கிரஸ் மேலிடத்தால் நியமிக்கப்பட்டார். காங்கிரஸ் தலைமையகத்தை சென்னையிலிருந்து திருச்சிக்கு மாற்றி அதைச் சட்டமறுப்பு இயக்க மையமாகக் கொண்டிருந்தார்.

- ராஜகோபாலாச்சாரி மதுரை சென்று மதுரை மாவட்டக் கமிட்டித் தலைவரான என்.எம்.ஆர். சுப்பராமனையும் வக்கில் வைத்தியநாத அய்யரையும் சந்தித்துப்பேசி வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகம் பற்றி முடிவு செய்தனர்.

- தமிழ்ப் புத்தாண்டு நாளும் ஜாலியன் வாலாபாக் படுகொலை, நாளும் ஒன்றாகச் சேர்ந்த 1930 ஏப்ரல் 13 ஆம் நாளன்று, ராஜாஜி, சுப்பராமன், மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 98 சத்தியாக்கிரகிகள் ஆக மொத்தம் 100 பேர் அதிகாலை 5 மணிக்குத் திருச்சியில் டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜனின் மகள் ராஜகோபாலாச்சாரியின் நெற்றியில் திலகமிட்டு வழியனுப்ப, தேசியக் கொடி பிடித்தோர் முன்செல்ல, சத்தியாகிரகிகள் வரிசைக்கு இருவராக அணுவகுத்துச் சென்றனர். வழிநெடுகிலும் பாரதியாரின் அச்சமில்லை என்ற பாடலை அவர்கள் பாடிச் சென்றனர்.

- அந்த யாத்திரைக்கென்றே நாமக்கல் கவிஞர் ராமலிங்கம்பிள்ளை ‘கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது, சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்’ என்ற பாடலை புனைந்து தந்திருந்தார். சத்தியாக்கிரகிகள் அனைவரும் அப்பாடலைப் பாடிச் சென்றனர்.

- திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி வழியாக பதினாறு நாட்கள் யாத்திரைக்குப் பின்னர் 1930 ஏப்ரல் 28 ஆம் தேதி சத்தியாகிரகிகள் வேதாரண்யத்தை அடைந்தனர்.

- ஏப்ரல் 30 ஆம் தேதி ராஜகோபாலாச்சாரி 16 சத்தியாக்கிரகிகளுடன் அகஸ்தியர் பள்ளியலுள்ள உப்பளத்தை அடைந்து சட்டத்தைமீறி உப்பை அள்ளினார்கள். ராகோபாலாச்சாரி மட்டும் கைது செய்யப்பட்டார்.

- அவருக்குப்பின் க. சந்தானம், மட்டப்பாறை வேங்கட்ராம அய்யர், கே. சுப்பிரமணிய அய்யர், ஜி. ராமச்சந்திரன் ஆகியோர் உப்புச் சத்தியாகிரகத்துக்குத் தலைமை தாங்கி, சட்டத்தை மீறிச் சிறை சென்றனர். வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகம் ஒன்றரை மாதகாலம் நடந்தது.

APOLLO STUDY CENTRE

- ராஜகோபாலாச்சாரியின் தலைமையில் திருச்சியிலிருந்து உப்புச் சத்தியாகிரகிகள் புறப்பட்ட அன்றே (ஏப்ரல் 13) 'ஆந்திர கேசரி' பிரகாசம் தலைமையில் சென்னை நகரில் உப்புச் சத்தியாகிரகப் போராட்டம் துவக்கப்பட்டது.

- சென்னை சோலிங்கபுரம் மட்டுமின்றி மதுரை, தூத்துக்குடி, கடலூர், ஈரோடு, நெல்லை, திருச்சி ஆகிய நகரங்களிலும் உப்புச் சத்தியாகிரகம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கானோர் சிறைதண்டனை பெற்றனர். இதனால் தமிழ்நாட்டில் பரபரப்பும் விழிப்புணர்ச்சியும் ஏற்பட்டன.

APPOLO STUDY CENTRE

**அரசாங்கத்தின் அடக்குமுறை:**

- 1930 மே 5 ஆம் தேதி காந்தி கை செய்யப்பட்டு ஏரவாடா சிறையில் அடைக்கப்பட்டதை அடுத்து தேசம் முழுவதிலும் அர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. சென்னை நகரிலும் தமிழ்நாட்டின் பிற நகரங்களிலும் கடையடைப்பும் வேலை நிறுத்தமும் நடைபெற்றன.
- காந்தி இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றபோது காந்தி இர்வின் ஒப்பந்தம் மீறப்பட்டு அரசாங்கம் சட்டமறுப்பு போராட்ட வீரர்களைப் பழிவாங்கத் தொடங்கியது.

- இலண்டனிலிருந்து திரும்பிய காந்தி மீண்டும் சட்டமறுப்பு இயக்கத்தைத் துவக்கியதால் கைது செய்யப்பட்டார்.

- காங்கிரஸ் காரியகமிட்டிகள் அனைத்தும் சட்ட விரோதமானவை என்று அறிவிக்கப்பட்டது. அவற்றின் அலுவலகங்கள் பூட்டப்பட்டன. தமிழ்நாடு முழுவதிலும் காங்கிரஸ் கொடிகளை இறக்கிவிட்டு அவற்றுக்குப் பதில் பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடியை ஏற்றினர் போலீசார்.

- காந்தி கை செய்யப்பட்டதிலிருந்து தொடர்ந்து ஆறு மாத காலத்திற்கு தமிழ்நாட்டில் சட்டமறுப்பு இயக்கம் உப்புச் சத்தியாக்கிரகத்தைவிடத் தீவிரமாக நடைபெற்றது. சிறைச்சாலைகள் நிரம்பி வழிந்தன. 1932 ஜனவரி மாதம் 26ம் தேதி சுயராஜ்ய தினக் கொண்டாட்டத்தின் போது பலர் கைது செய்யப்பட்டனர். திருப்பூரில் தடை உத்தரவை மீறி பி.எஸ். சுந்தரம் தலைமையில் சென்ற ஊர்வலத்தை போலீஸ் அதிகாரி முகமதுவின் தலைமையில் போலீசார் மூர்க்கத்தனமாகத் தாக்கினர் (ஏப்ரல் 10). அத்தாக்குதலின் போது திருப்பூர் குமாரசாமியின் மண்டை நொறுக்கப்பட்டது. கொடியைப் பிடித்தவாறே உயிர் விட்டார் திருப்பூர் குமரன்.
- விருநகரில் காமராஜர் ஜாமீன் கட்ட மறுத்து ஓராண்டு சிறை தண்டனை பெற்றார். பல மாவட்டங்களிலும் சட்டமீறல் குற்றத்துக்காகப் பலர் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டனர்.

APOLLO STUDY CENTRE

**தனிநபர் சத்தியாக்கிரகம்**

- 1940 அக்டோபர் 13ல் வார்தாவில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் காந்தி வெளியிட்ட தனிநபர் சத்தியாகிரகத் திட்டத்தை யொட்டித் தமிழ்நாட்டில் பலர் கைதாயினர். டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் தான் தமிழ்நாட்டின் முதல் சத்தியாகிரகியாகச் சிறை சென்றவர்.

- ராஜகோபாலாச்சாரி, சத்தியமூர்த்தி, டி.பிரகாசம், டாக்டர் பி. சுப்பராயன் ஆகியோர் தனிநபர் சத்தியாகிரகத்தின் போது சிறை புகுந்த செம்மல்களாவர்.

- தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கம் உப்புச்சத்தியாகிரகம் ஆகிய போராட்டங்களில் ஈடுபட்டவர்களைவிட தனிநபர் சத்தியாகிரகத்தில் அதிக அளவிலும் அதிக ஆர்வத்துடனும் காங்கிரஸ்காரர்கள் கலந்துகொண்டு சிறை தண்டனை பெற்றனர். தமிழ்நாட்டில் தேச விடுதலையைப் போராட்டச் சுடர்விளக்கு தொடர்ந்து எரிந்துகொண்டே இருந்தது.

**புரட்சித் தீவிரவாதம்:**

- சிவகாசி புரட்சித் தீவிரவாதத்தின் குவிமையமாகத் திகழ்ந்தது. துரைசாமி நாடார், தனமூர்த்தி நாடார், கணபதி நாடார் ஆகியோர் தலைமறைவாகிப் புரட்சி இயக்கத்தை நடத்தி வந்தனர்.

**வெள்ளையனே வெளியேறு இயக்கம் 1942**

- 1942 ஆகஸ்டு 7,8 தேதிகளில் பம்பாயில் கூடிய காங்கிரசில் வெள்ளையனே வெளியேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அடுத்தநாள் காந்தி கைது செய்யப்பட்டார்.

- காந்தி கைது செய்யப்பட்ட செய்தி எட்டிய உடன் சென்னையில் பூர்ண அர்த்தால் கடைபிடிக்கப்பட்டது. கடைகள் அடைக்கப்பட்டன.

- சென்னை வடஆற்காடு, தென்ஆற்காடு மாவட்டங்களில் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

- தஞ்சை மாவட்டத்தில் காங்கிரஸ் கலகக்காரர்கள் பல குழுக்களாகப் பிரிந்து கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.
- கோயமுத்தூரிலும், சிங்காநல்லூரிலும் பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லாமல் தடை உத்தரவைமீறி ஊர்வலம் சென்றனர்.

- மதுரை மாவட்டம் முழுவதும் கடையடைப்பு செய்யப்பட்டது.

- இராமநாதபுரம் மாவட்டத்தில் வன்முறை நிகழ்ச்சிகள் பரவலாக நடைபெற்றன. செட்டிநாட்டு இளைஞர்களும் ஆகஸ்டு கிளர்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

- செல்லத்துறை தலைமையில் ஒரு கூட்டம் திருவாடணை சப்ஜெயிலை உடைத்துக் காவலில் வைக்கப்பட்டிருந்த சின்ன அண்ணாமலையையும் டி.என். ராமநாதனையும் பிறரையும் விடுவித்தனர்.

- ராஜபாளையத்தில் தேசிய இளைஞர் அணியினர் ஆகஸ்டு 9ம் தேதி பிரமாண்டமான ஊர்வலத்தை நடத்தினர்.

- நெல்லை, தூத்துக்குடி போன்ற நகரங்களில் ஆகஸ்டு இரண்டாவது வாரத்தில் கடையடைப்பு நடைபெற்றது. கல்வி நிலையங்கள் மூடப்பட்டன.

- 1942 ஆகஸ்டு மாதம் முழுவதும் தமிழ்நாட்டின் பல இடங்களிலும் வன்முறைக் கலவரங்கள் நடைபெற்றன. அவையாவும் தனிநபர்களாலும், குழுக்களாலும், கூட்டங்களாலும் நடத்தப்பட்வையோகும். ஆதனால் அப்போராட்டம் ஒரு தலைமையின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட மக்கள் இயக்கமாக உருவெடுக்க முடியாமல் போய்விட்டது.

- சதிவழக்கு என்ற பெயரில் பல பொய்வழக்குகள் போடப்பட்டன. தமிழ்நாட்டில் நடைபெற்ற அக்னித் திராவக வழக்கு, லோன் கொலை வழக்கு, சீர்காழி சதி வழக்கு, விமான தள எதிர்ப்பு வழக்கு, திருவையாறு கலவர வழக்கு ஆகியவை பிரசித்தம்.

- காந்தியின் கட்டளைப்படி ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கம் தோன்றி ஆகஸ்டு 9 ஆம் தேதியை நாட்டு மக்கள் கொண்டாடினர். தமிழ்நாட்டில் சென்னை, மதுரை,

APOLLO STUDY CENTRE

திருநெல்வேலி கைது செய்யப்பட்டனர். காந்தியின் ஆலோசனைப்படி தலைமறைவாயிருந்த காங்கிரஸ்காரர்கள் பகிரங்கமாக வெளியே வந்தனர்.

## பாரதியார்

தேசிய உணர்வூட்டும் தேசியப் பாடல்கள் புனைந்த பாரதியார் 'தேசியக்கவி' எனப் போற்றப்படுவதில் வியப்பில்லை. இயல்பிலே நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் கொண்ட அவர் திலகர் சகாப்தத்தில் தமிழக அரசியலில் முக்கியப் பங்கு பெற்றார். 1885ல் பம்பாயில் கூடிய காங்கிரஸ் மாநாடு தொட்டு அவ்வியக்கத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அம்மாநாட்டில் பெருமளவில் தமிழ் நாட்டினர் கலந்து கொண்டதைப் பெருமித உணர்வுடன் வருணித்துள்ளார்.

சமூக சமய மறுமலர்ச்சி மூலம் தேசிய உணர்ச்சி கிளர்ந்தெழச் செய்த ராஜாராம்மோகன்ராய், விவேகானந்தர் ஆகியோரைப் போற்றி பாராட்டியுள்ளார். குறிப்பாக ராம்மோகன்ராயை "நாட்டைப் பிடித்துள்ள நோய்களை நிவாரணஞ்செய்யப் பிறந்த ஆயுர்வேத வைத்தியர்" என்று புகழ்ந்துள்ளார். பெண்ணுரிமை, மூடநம்பிக்கை எதிர்ப்பு, சாதி வேறுபாடுகளைச் சாடுதல் போன்ற சமூக சீர்திருத்தங்களிலும் ஆர்வமுடையவராயிருந்தார்.

### தீவிரவாதி பாரதியார்

தொடக்க முதலே அவர் தீவிரவாதியாக விளங்கினார். நாட்டு விடுதலைக்காக செயல்படத் துடிக்கும் தீவிரவாதிகளை "ஒளி படைத்த கண்ணினாய் வாவா உறுதி கொண்ட நெஞ்சினாய் வாவா" என்று வரவேற்றார். மிதவாதிகளை "வலிமையற்ற தோளினாய் போ போ, மார்பிலே ஒடுங்கினாய் போ போ" என்று விரட்டினார். வங்கப் பிரிவினையை எதிர்த்து நின்ற வங்க மக்களைப் பாராட்டிய பாடல் தான் "சுதேசமித்திரன் இதழில்" வெளிவந்த அவரது முதல் பாடல். வங்கத்தில் ஒலித்த புரட்சி கீதமான பங்கிம் சந்திரரின் வந்தே மாதரப் பாடலை தமிழில் மொழி பெயர்த்ததோடு தனியே தமிழில் வந்தே மாதரப் பாடல் ஒன்றையும் எழுதினார். 1906ல் கல்கத்தா காங்கிரசிலும் 1907ல் சூரத் காங்கிரசிலும் கலந்து கொண்டு தீவிரவாதிகளை ஆதரித்தார். கல்கத்தா காங்கிரசில் வி. கிருஷ்ணசாமி ஐயர் என்ற மிதவாதி சென்னை மக்கள் அன்னியப் பொருள் புறக்கணிப்பை விரும்பமாட்டார்கள் என்று கூறியதை கடுமையாக எதிர்த்தார். தீவிரவாதத்தை ஆதரித்த பாரதியார் வன்முறையை ஆதரிக்காதது குறிப்பிடத்தக்கது. வாஞ்சிநாதன் ஆஷ் துரையை கொலை செய்ததை அவர் கண்டித்தார்.

### சுதேசி இயக்கமும் பாரதியாரும்

சுதேசி இயக்கத்தை ஆதரித்த பாரதியார், வ.உ.சிதம்பரனார் சுதேசக் கப்பல் கம்பெனி தொடங்கியதை வரவேற்று தமது "இந்தியா" இதழில் எழுதினார். அக்கம்பெனியார் "காலியா", "லாவோ" என்ற இருகப்பல்கள் வாங்கியதைக் கண்டு பெருமகிழ்ச்சியுற்றார். நீண்ட காலமாக குழந்தைப் பேறில்லா பெண்ணொருத்தி ஏககாலத்தில் இரண்டு புத்தரர்களைப் பெற்றால் எவ்வாறு பேரானந்தம் கொள்வாளோ அப்படி பாரதமாதா கொள்கிறாள் என்று குறிப்பிட்டார்.

### புதுவைக்கு செல்லல்

1907ல் வங்க தீவிரவாதி பிபின் சந்திரபாலை சென்னைக்கு அழைத்து பொதுக் கூட்டத்தில் பேசுமாறு செய்தார். வ.உ.சியும் கலெக்டர் விஞ்சும் சந்தித்த போது நடைபெற்ற உரையாடலை கற்பனைக் கவிதையாக வடித்த நயம் ரசிக்கத்தகுந்தது. சிதம்பரனாருக்கு இரு ஆயுள் தண்டனை விதித்த பினஹேயின் அநீதியான தீர்ப்பை கண்டித்து தமது "இந்தியா" இதழில் எழுதினார். இதனால் ஆத்திரமடைந்த அரசு அவரைக் கைது செய்ய ஆணை பிறப்பித்தது. அதனை அறிந்த பாரதியார் புதுச்சேரிக்கு சென்று விட்டார். அவர் புதுவைக்கு செல்லாதிருந்தால் சிதம்பரனாரைப் போன்றோ சிவாவைப் போன்றோ சிறைத்தண்டனை பெற்றிருப்பார். மின்டோ மார்லி சீர்திருத்தத்தின் பயன்களை "பயன்படா பழம்" என்று கேலி புரிந்தார்.

### முதல் உலகப்போரின் போது

முதல் உலகப் போர் தொடங்கியதும், சுய ஆட்சி கோரும் விண்ணப்பம் தயார் செய்து அதில் லட்சக்கணக்கான மக்கள் கையொப்பம் பெற்று பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கனுப்ப வேண்டும் என்று 1916ல் சுதேசமித்திரன் இதழில் எழுதினார். போர் நெருக்கடி சூழ்நிலையைப் பயன்படுத்தி அயர்லாந்து பிரிட்டன் பிடியிலிருந்து வெளியேற புகழ்பெற்ற ஈஸ்டர் கலகத்தில் ஈடுபட்டதையும், ரஷியப் பிடியிலிருந்து வெளியேற போலந்து மக்கள் புரியும் போரையும் பாரதியார் உதாரணங்களாக எடுத்துக் காட்டினார். ரஷியாவில் புரட்சி ஏற்பட்டு ஜார் மன்னர் கொடுங்கோலாட்சி வீழ்ந்ததை வியந்து பாடினார்.

**புதுவையில் பாரதியார்**

புதுவையில் புகலிடம் புகுந்த முதல் தமிழக அரசியல்வாதி பாரதியார் தான். அதன்பின் வ.வே.சு. ஐயர் அரவிந்தர் போன்றோர் அங்கு வந்தனர். புதுவை வந்தபின்னும் அவரது விடுதலை வேட்கை தணியவில்லை. மண்டயம் ஆச்சாரியார் என்பார் ஒத்துழைப்புடன் "இந்தியா" இதழை தொடர்ந்து வெளியிட்டு வந்தார். புதுவையிலிருக்கும்போது பாரதியார் பல கவிதை, கட்டுரை எழுதினார். பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு போன்றவை அப்போதுதான் எழுதப்பட்டன. ஆனால் அவர் அப்போது வறுமையில் வாடினார்.

**மீண்டும் இந்தியாவில்**

1908ல் புதுவையில் குடியேறிய அவர் பத்தாண்டு 'வனவாசத்திற்கு'ப் பின் குடும்பத்தினருடன் 1918ல் இந்தியாவிற்கு திரும்பினார். ஆனால் வழியிலே கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். சிறையில் நோய்வாய் பட்டதால் சில வாரங்களில் விடுதலை செய்யப்பட்டார். அவர் கடைசியாக கலந்து கொண்ட பொது நிகழ்ச்சி 1919 ஏப்ரல் 6ம் நாள் ரௌலட் சட்டத்தை எதிர்த்து அனுஷ்டிக்கப்பட்ட துக்கநாள் நிகழ்ச்சியாகும். அந்நிகழ்ச்சியையொட்டிய பஜனையில் திரு.வி.க. வேண்டுகோளுக்கிணங்கி முருகன் பேரில் பாடல் பாடினார்.

சர்வ வல்லமைமிக்க பிரிட்டிஷ் பேரரசை எதிர்த்துப் போராட பாரதியார் எடுத்த ஆயுதம் பேனா முனையாகும். அவரது பேனா முனை உதிர்த்த கவிதைகள், தேசிய எழுச்சியின் வித்துக்களாக விழுந்தன. பல செய்தித்தாட்கள் அவரது பேனா முனை கருத்தோவியங்களைத் தாங்கி வந்தன.

சக்கரவர்த்தினி - மாத இதழ்

இந்தியா - வார இதழ்

பால பாரதா - ஆங்கில வார ஏடு

இவை தவிர சுதேச மித்திரனிலும் அவ்வப்போது எழுதிவந்தார்.

**இதழாசிரியராக பாரதியார்**

ஓர் பத்திரிக்கையாளர் மற்றும் துணை ஆசிரியராக சுதேச மித்திரன் என்ற பத்திரிக்கையில் 1904ஆம் ஆண்டு தொடங்கினார். 1906ஆம் ஆண்டு மே மாதம் 'இந்தியா' எனப்படும் ஓர் புதிய நாளிதழ் தொடங்கப்பட்டது. இது பிரெஞ்சு புரட்சியின் மூன்று முக்கிய முழக்கங்களான சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் போன்றவற்றை தனது குறிக்கோளாக அறிவித்தது.

தனது புரட்சிகரமான முனைப்புகளை வெளியிடுவதற்கு பாரதியார் அவர்கள் வார இதழை சிகப்பு தாளில் அச்சிட்டு பிரசுரித்தார். அரசியல் கேலிச் சித்திரத்துடன் வெளியிடப்பட்ட தமிழ்நாட்டின் முதல் நாளேடு இந்தியா என்பதாகும். இவர் மேலும் விஜயா என்கிற தமிழ் தினசரியின் அதன் பதிப்பாசிரியராகவும் இருந்து வெளியிட்டார். ''பால பாரதா'' என்கிற ஆங்கில மாத இதழையும், பாண்டிச்சேரியில் ''சூரியோதயம்'' எனும் உள்நாட்டு வார இதழை வெளியிட்டார்.

APP WORLD STUDY CENTRE

**சமூக சீர்திருத்தவாதியாக பாரதியார்**

பாரதியார் சாதிய அமைப்புக்கு எதிராக செயல்பட்டவர். அட்டவணை சாதியினரையும் பூநூர் அணியச்செய்து வேதம் ஓதச்செய்தார். இந்தியர், தெளிவாக அனைவரும் பாரதத்தாயின் குழந்தைகள் என ஒன்றுபட்டு செயல்பட்டால் அன்றி இந்திய விடுதலை சாத்தியமாகாது என்று கூறினார். இவர் பெண்களின் உரிமைகள், பாலினச் சமத்துவம் மற்றும் பெண்களின் ஆற்றலாதல் ஆகியவற்றை மிகவும் நம்பினார். இவர் குழந்தை திருமணம், வரதட்சணை முறையைத் தீவிரமாக எதிர்த்தார். ஆனால் விதவை திருமணத்தை அவர் ஆதரித்தார்.

**ம. சிங்காரவேலர் (1860-1946)**

விடுதலை போராட்டத்தில் விவசாயிகள், தொழிலாளர்கள் நலன்களை இணைப்பதிலும் இந்திய அரசியலில் சமதர்மக் கருத்துகள் பரவியதிலும் ம. சிங்கார வேலரின் அரசியல் சிந்தனைகள் முக்கியப் பங்காற்றின.

இச்சமயத்தில் 1922ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இந்திய காங்கிரசு குழுவின் கூட்டத்தில் தமிழகப் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட அவர் அங்கும் விவாதத்தை உருவாக்கி தமக்கு ஆதரவு திரட்டினார். அவரது கருத்துக்கள் வருமாறு:

- ✓ இந்திய விடுதலை என்பது விவசாயிகள், தொழிலாளர்களின் பொருளாதார சுதந்திரத்தை உள்ளடக்கியதாகும்.
- ✓ தொழிலாளர்கள், விவசாயிகள் நலன்களுக்காகவும் காங்கிரசு பேரியக்கம் போராட வேண்டும்
- ✓ விடுதலைப் போராட்டத்தில் தொழிலாளர்கள் விவசாயிகளையும் இணைத்துக்கொள்ள வேண்டும்
- ✓ பல்வேறு அமைப்புகளில் உள்ள மக்களை ஒன்று திரட்ட காங்கிரசு தலைவர்கள் உதவ வேண்டும்.

இதன்விளைவாக 1922ல் இந்திய தேசிய காங்கிரசு தொழிலாளர்களை அமைப்பு ரீதியாக ஒன்று திரட்டத் தீர்மானம் நிறைவேற்றியதுடன் இதற்கென ஓர் குழுவினை அமைத்தது. ஆறுபேர்கொண்ட அக்குழுவில் சிங்காரவேலரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் பிரச்சனைகளைப் பொதுமக்களிடம் பேசும்போது தமிழ் மொழியிலேயே பேச வேண்டும் என உறுதியாக இருந்தார். இதையொட்டி 1918இல் சென்னை மாகாண சங்கத்தின் மாநாட்டில் இது குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த மாநாட்டில் சிங்காரவேலர் மற்றும் ஈ.வெ.ரா. பெரியார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சுயமரியாதை, பொதுவுடைமைவாதம் இயக்கங்களின் மீதான ம. சிங்காரவேலரின் தாக்கம்**

தோழிலாளர்கள் பலமாகத் திகழ்ந்த சென்னை நகரில் இந்தியாவின் முதல் உழைப்பாளர் தினத்தை 1923 மே முதல் நாளன்று நடத்திக்காட்டினார். அதே நாளில் தொழிலாளர் விவசாயிகள் கட்சி அமைக்கப்படுவதாகவும் அறிவித்தார்.

**தொழிலாளர்களுக்கான கோரிக்கைகள்**

- ✓ எட்டுமணிநேர வேலை
- ✓ சங்கம் அமைக்கும் உரிமை

- ✓ தங்கள் கோரிக்கைகளை வென்றெடுக்க கடைசி ஆயுதமாக வேலைநிறுத்தம் செய்யும் உரிமை
- ✓ கோரிக்கைகளை பரிசீலிக்க முத்தரப்பு பேச்சுவார்த்தைக் குழு
- ✓ குறைந்தபட்ச ஊதியம்
- ✓ அடிப்படை வசதிகளுடன் கூடிய சுகாதாரமான குடியிருப்பு வசதி
- ✓ மருத்துவம் மற்றும் ஆயுள் காப்பீடு
- ✓ வருங்கால வைப்பு நிதி
- ✓ சம்பளத்துடன் கூடிய ஈட்டிய விடுப்பு
- ✓ இலவச மருத்துவ உதவி
- ✓ பேறுகால விடுப்பு
- ✓ ஒப்பந்த முறை ஒழிப்பு

**விவசாயிகளுக்கு**

- ✓ இலவச நீர்ப்பாசனம்
- ✓ சமீன்தார் முறை ஒழிப்பு

**பொது மக்களுக்கு**

- ✓ அனைவருக்கும் வாக்குரிமை
- ✓ அடித்தட்டு மக்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் போன்றோர் தேர்தலில் போட்டியிட அனுமதி

1925ல் கான்பூர் நகரில் இந்தியாவின் முதல் பொதுவுடைமைவாதம் மாநாடு நடந்தபோது அதற்குத் தலைமை ஏற்று நடத்தித் தந்தார். அப்போது “வன்முறையற்ற மார்க்கிசியப் பாதை” யை வலியுறுத்திப்பேசினார். மேலும், “இந்தியாவுக்கேற்ற மார்க்கிசியப் பாதையைத் திட்டமிட வேண்டும்” என்றும் கேட்டுக்கொண்டார். காங்கிரசு கட்சியில் இருந்துகொண்டே பொதுவுடைமைவாதிகள் தனிப்பிரிவாக இயங்க வேண்டும்” என்றார். இதையொட்டி காங்கிரசு கட்சிக்குள் சமதர்ம பிரிவு உருவானது.

**ம. சிங்காரவேலரின் வாழ்வும் சமூக பணியும்**

ம. சிங்காரவேலர் இளம் வயதிலேயே இந்து சமயத்தில் நிலவும் வர்ண அமைப்பிலும் மூட நம்பிக்கைகளிலும் அதிருப்தி அடைந்திருந்தார். இதன் விளைவாக 1890களிலேயே பல இடங்களில் பௌத்த சங்கம் அமைத்து வர்ண அமைப்புக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் எதிராகப் பரப்புரை செய்தார்.

தொடர்ந்து குடிசைப் பகுதிகளில் வாழ்ந்த தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடினார். இதன் அடிப்படையிலேயே காங்கிரசு இயக்கத்தில் செயலாற்றினார். பின்னர் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தார்.

ம. சிங்காலவேலர் தென்னிந்தியாவின் முதல் பொதுவுடைமைவாதி என்று நேசத்துடன் நினைவு கூறப்படுகிறார்.

**பெரியார் (1879-1973)**

தமிழக அரசியல் சிந்தனையாளர்களில் ஈ.வெ.ரா.பெரியார் மிகச்சிறந்த சிந்தனையாளராக கருதப்படுகிறார்.

பன்னெடுங்காலமாக தமிழகத்தைப் பிடித்திருந்த மூடப்பழக்க வழக்கங்கள், பெண்ணடிமை, சமூகப் பின்னடைவுகளுக்கு அறிவையும், சுய மரியாதையையும் அடிப்படையாகக் கொண்டு தனது நெடிய வாழ்நாள் முழுவதும் போராடியவர். இதற்காகத் தந்தை பெரியார் என்று தமிழக மக்களால் அழைக்கப்படுபவர். பண்பாட்டு ரீதியாக அவர் வகுத்துத் தந்த திராவிடக் கருத்துக்கள் இன்று இந்தியா முழுவதும் ஒளி வீசுகிறது என்று புகழ்பெற்ற சமூக நீதி அறிஞர்கள் கூறுகிறார்கள்.

காந்தியின் அரசியல் வருகையால் ஈர்க்கப்பட்ட பெரியார் காங்கிரசு இயக்கத்தில் இணைந்து சுதந்திரப்போராட்ட இயக்கத்திலும், சமூக சீர்திருத்தத்திற்காகவும் தீவிரமாகப் பங்காற்றினார்.

காங்கிரசு இயக்கத்தில் மேட்டுக்குடியினரின் செல்வாக்கு கோலோச்சிய 1920களில் அடித்தட்டு மக்களிடம் காங்கிரசு பேரியக்கத்தைக் கொண்டு சென்றதிலும், ஆலய நுழைவு போராட்டங்கள் வெற்றி பெற்றதிலும் பெரியார் பெரும் பங்காற்றினார்.

**தேசியவாதம் என்பது சுரண்டலாகும்**

தேசிய வாதம் என்பது ஓர் கற்பனையான உணர்வாகும். ஆகவே தேசிய உணர்வு என்பது வசதிமிக்க மற்றும் அதிகாரத்தில் உள்ளவர்களால் மக்களை ஏமாற்றி அவர்களின் எதிர்மறை உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் சதியாகும். அது ஓர் தவறான அனுமானமாகும். இதனை வசதிபடைத்த உயர் குடியினர் ஏழை சமுதாயத்தின் உரிமைகளைத் தடுப்பதற்காக பயன்படுத்துகின்றனர்.

தேசியவாதம் என்பது மக்களுக்கு ஓர் மயக்கத்தையும் உணர்வுப்பூர்வமான வெறியையும் குறிக்கும் சொல்லாகி விட்டது எனக்கூறுகிறார்.

**இந்தியாவில் வேறுபாடுகளின் தேசம்**

இந்தியா ஒரு ‘தேசம்’ என்று சொல்வதைவிட, ‘திராவிடநாடு’ ஒரு ‘தேசம்’ ஆந்திரநாடு ஒரு ‘தேசம்’ வங்காளநாடு ஒரு ‘தேசம்’ என்று சொன்னாலும் பொருந்தும். உதாரணமாக திராவிட நாட்டை எடுத்துக்கொண்டால் திராவிடநாடு என்று தனிப்பட்ட பண்பாடு கலை, மொழி, நாகரிகம், மற்றும் ஆட்சியின் கீழ் ஆயிரக்கணக்கான வருடங்கள் இருந்து வந்ததென்று சரித்திரம் கூறுவதை யாராலும் மறைக்க முடியாது.

**மொழிக்கொள்கை**

“அவரவர் மொழியைக் காப்பாற்றிக்கொள்வதற்கு அவரவருக்கு உரிமை உண்டு. இந்த உரிமை திராவிட சமதர்மக் குடியாட்சியில் பாதுகாக்கப்படும். எந்த ஒரு மொழியும், மற்றொரு மொழி பேசுபவர் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படக்கூடாது. பிரிவினைவாதத்திற்கான ஆயுதமாக மொழி பயன்படுத்தப்படக்கூடாது.

**சாதியற்ற சமுதாயம்**

பெரியார் ‘தமிழ்நாடு தமிழருக்கே, திராவிட நாடு திராவிடருக்கே’ என்று தொடர்ச்சியான பரப்புரைகள், போராட்டங்களை நடத்தினார். பொதுச்செயல்திட்டம், பொதுவேலைத்திட்டம், இஸ்லாமுக்கு மதமாற்றம், திராவிடநாட்டுப் பிரிவினை போன்றவற்றில் பல்வேறு வடிவங்களில் ஆதிக்க சக்திகளை எதிர்த்துப் போராடினார்.

ஆதிக்க சக்திகள் மிக எளிதாக தமிழன், தமிழ்த்தேசியவாதம், தேசிய இனம் போன்ற உணர்வுகளை ஏற்றி, சில தமிழ் தேசியத் தலைவர்கள் மூலமாக மீண்டும் தங்களது ஆதிக்கத்தைத் தொடரும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டபோது, ஒருகால கட்டத்தில் பெரியார், இந்தத் திராவிட நாடே கூட வேண்டாம். சாதி ஒழிப்பே முக்கியம் என்ற முடிவுக்கு வந்தார் என்பதை அவரின் சிந்தனைத் தொகுப்புகள் வழியாக அறியலாம்.

“திராவிட நாடு பெறாவிட்டாலும் சரி; சில ஆதிக்க சக்திகளை ஒழிக்க முடியாவிட்டாலும் சரி; முதலாளித்துவத்தை அழிக்க முடியாது போனாலும் சரி; சாதியை ஒழிக்கின்ற ஒரே காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்தால் போதும் என்கிறார். இது ஒன்றே திராவிடர் கழகத்தின் லட்சிய வெற்றி என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அந்த அளவுக்கு இந்த சாதி வெறியானது, திராவிட இனத்தைச் சின்னாபின்னப்படுத்தி ஆரியத்துக்கு அடிமையாக்கி வைத்திருக்கிறது” என்று 1950களின் தொடக்கத்தில் அவர் தனது அரசியல் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

APOLLO STUDY CENTRE

**வ.உ.சிதம்பரம்**

வங்காளப் பிரிவினையின் விளைவாக எழுந்த சுதேசிய இயக்கம் தமிழ்நாட்டுக்களித்த தவப்புதல்வன் வ.உ.சிதம்பர பிள்ளை. கோவில்பட்டி தாலுக்காவிலுள்ள ஒட்டப்பிடாரம் என்ற சிற்றூரில் பிறந்த வ.உ.சி., வீரபாண்டிய கட்டபொம்மனிடம் தலைமை அமைச்சராகப் பணியாற்றிய தானாபதிப் பிள்ளையின் குடும்ப வழித்தோன்றல் ஆவார்.

சுதேசி கப்பல் கம்பெனியை நிறுவியதோடு நில்லாமல் சுதேசி இயக்கத்தை பல தொழில் துறைகளுக்கும் விரிவு படுத்தினார். கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. தூத்துக்குடியில் தருமலங்க நெசவுச் சாலை, தேசிய பண்டக சாலை ஆகியவற்றைத் தோற்றுவித்தார். சென்னை நகரில் சென்னை விவசாய-கைத்தொழில் சங்கம் லிமிடெட் ஒன்றை நிறுவினார்.

1907 சூரத் காங்கிரசுக்குத் தீவிரவாதிகளை அதிக அளவில் அழைத்து வருமாறு அரவிந்தர் வ.உ.சிக்கு கொடுத்த தந்தியை சிரமேற்கொண்டு தமிழ்நாட்டுத் திலகரான அவர் சென்னை சென்று பாரதியாருடனும், மண்டையம் சீனிவாசச்சாரியாருடனும் கலந்து பேசி தமிழ்நாட்டுப் பிரதிநிதிகளை சூரத் மாநாட்டுக்கு அழைத்துச் சென்றார்.

சூரத்திலிருந்து திரும்பிய வ.உ.சி., பிபின்சந்திர பாலர் விடுதலையான நாளை விமரிசையாகக் கொண்டாடத் திட்டமிட்டார். இதனால் ராஜதுரோகம் குற்றம்சாற்றப்பட்டு வ.உ.சிக்கு 40 ஆண்டுகள் சிறைதண்டனை விதிக்கப்பட்டது.

பிறகு வ.உ.சி கோயமுத்தூர் சிறையில் அடைக்கப்பட்டார். அதன்பின்னர் கேரள மாநிலத்திலுள்ள கண்ணனூர் மத்திய சிறைக்கு மாற்றப்பட்டார். அங்கும் அவர் மலச்சட்டி தூக்கினார், கல்லுடைத்தார், செக்கிழுத்தார்.

**சுப்பிரமணிய சிவா**

வ.உ.சியும் சிவாவும் தமிழ்நாட்டு சுதேசியக்கத்தின் இரட்டையர்களாகத் திகழ்ந்தார்கள். வ.உ.சியைப் போன்றே சிவாவும் இராமகிருஷ்ண-விவேகாந்தா வேதாந்த இயக்கத்தில் ஈடுபட்டு, அதன் வழி சுதேசி இயக்கத்துக்கு ஈர்க்கப்பட்டவர். ‘சுதந்திரானந்தா’ என்ற புனைப்பெயரை சூட்டிக் கொண்டவர் சிவா. மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த வத்தலக்குண்டுவாசியான இளைஞர் சிவா தூத்துக்குடி வந்து வ.உ.சியுடன் இணைந்து செயல்படலானார். சுதேசி இயக்கம் பிரச்சாரத்தில் இவ்விருவரும் தீவிரமாகப் பங்குகொண்டனர். பிபின் சந்திர பாலர் விடுதலை நாளை மீறி தாமிரபரணி பொதுக்கூட்டத்தில் பேசியதற்காக வ.உ.சியுடன், சிவாவும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு, பத்தாண்டுகள் சிறை தண்டனை பெற்றார். திருச்சி சிறையில் அடைக்கப்பட்ட சிவா பல கொடுமைகளுக்குள்ளானதோடு தொழுநோயால் பாதிக்கப்பட்டார். எனவே அவர் சேலத்தில் தொழுநோய் கண்ட சிரிமினல் குற்றவாளிகள் அடைக்கப்பட்டிருந்த சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்.

சிறையிலிருந்து விடுதலையான சிவா தருமபுரி மாவட்டத்திலுள்ள பாப்பாரப்பட்டியில் ‘பாரதி ஆசிரமம்’ என்ற பெயரால் தேச பக்தர்களின் பாசறை ஒன்றை நிறுவி, இளம் தேசாபிமானிகளுக்கு நாட்டு விடுதலைப் போருக்கான பயிற்சி அளித்தார். பாரதியாரின் தேசயப் பாடல்களைப் பாடிச் செல்வதற்கென பாரத ஆசிரியப் பாடல் குழுவை அமைத்தார். சிவாஜி, தேசிங்கு ராஜன் ஆகிய மாவீரர்களின் வரலாற்றை நாடகங்களாக்கினார். ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சியைத் தூண்டும் வகையில் நாடக உரையாடல்களை எழுதினார். பாடியும், பேசியும், நடித்தும் மக்களிடையே விடுதலை உணர்வை ஊட்டி

APOLLO STUDY CENTRE

வந்தார் சிவா. அரசுக்கெதிராக செயல்பட்டார் என சிவாமீது நான்கு முறை (1908, 1921, 1922, 1924) குற்றம் சாட்டி வழக்கு தொடுத்து தண்டித்தது அரசாங்கம்.

APOLLO STUDY CENTRE